இது குறித்துப் பல்கலைக் கழகமும், மாணவர் விடுதி அதிகாரிகளுந்தான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் அரசு எந்த வகையிலும் தலையிடுவதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்களும், திரு. கே. சகாதேவக் கண்டர் அவர்களும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர இருந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், அவர்கள் இருவரும் பேரவையில் இல்லாத காரணத்தினால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

அடுத்து, திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

(iv) நெல்லை மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரி வஜாவும், கடன் தவணை ஒத்திவைப்பும்

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அவசர, பொதுமுக்கியம் வாய்ந்த, கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

" திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை, சாத்தான்குளம் வட்டங்களில் சென்ற 1374 பசலி முதல் நாளது 1376 பசலி முடிய பருவமழை பொய்த்துப் போய் விட்டதால் அப்பகுதி விவசாயிகளுக்கு உடனடியாக வரிவஜா, கடன் தவணை ஒத்திவைப்பு, பஞ்ச நிவாரண வேலை முதலியவற்றைத் துரிதமாகச் செய்ய வேண்டும்."

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததினால் பாதிக்கப்பட்டுள்ள சங்கரன்கோயில், தென்காசி, செங்கோட்டை, திருச்செந்தூர் வட்டங்களில் குடியானவர் செலுத்த வேண்டிய கடன் தவணை வசூல் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்றும், நிலவரி வசூல் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், இவ்வட்டங்களில் பஞ்சத்துயர் தணிப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1967, அக்டோபர் திங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாகவும் கடுமையாகவும் மழை பெய்தபோதிலும், சங்கரன் கோவில், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் வடகிழக்குப் பருவமழை ஓரளவு தவறிவிட்டது. மேற்சொன்ன வட்டங்களில் உள்ள ஏரிகளில் பாசனத்திற்கான நீர் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை. 1967, அக்கோபர், நவம்பர் திங்கள்களில் சிறிதளவு நீர் பெற்ற சில ஏரிகள்கூட வற்றிப் போயின. மழை

1968 மார்ச் 30] [திரு. கே. ஏ. மதியழகன்]

பொய்த்ததன் சீர்கேடான விளைவுகள் இவ்வட்டங்களில் உணரப் படுகின்றன. இந்த வட்டங்களிலுள்ள குடியானவர்களின் பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு, சங்கரன்கோயில், தென்காசி, வட்டங்களில் நடப்பு நில வரியையும், நடப்புக் கடன் தவணைத் தொகைகளையும் மெதுவாக வசூலிக்கும் முறையை மேற் கொள்ளலாமென்று கலெக்டர் பரிவுரை செய்துள்ளார். செங் கோட்டை வட்டத்தைப் பொறுத்தவரையில் நடப்பும் கடன் தவணைத் தொகையைமட்டும் மெதுவாக வசூலிக்கலாமென்று கலெக்டர் பரிவுரை செய்துள்ளார். நிலவரியைப் பொறுத்த வரையில் இந்த வட்டத்தின் நன்செய், புன்செய் நிலங்கள் ஆகிய இரண்டிற்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் விதிக்கப்படும் நிலவரியை மக்கள் தாமாகவே மனமுவந்து செலுத்தி விடு கின்றனர். இவ்வட்டங்களில் குடியானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சிறு பாசனப் பணிகள், சாலைப் பணிகள், பாசனக் கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகள் போன்ற பஞ்சத்துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்குமாறு கலெக்டர் வேண்டியுள்ளார். கலெக்டர் அனுப்பியுள்ள இச் செயற் குறிப்புகள் அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளன.

சாத்தான்குளம் துணை வட்டத்தில் தாமிரபரணி திட்டத்தின் கீழ் உள்ள பயிர்கள் நல்ல நிலையில் உள்ளன. மணிமுத்தாறு தலைமைக் கால்வாய்த் திட்டத்தின்கீழ் வரும் பயிர்கள் இயல்பான நிலையில் உள்ளன. மழை நீரை நம்பியுள்ள ஏரிகளிலிருந்து, பாசனம் பெற்று வளர்ந்துவரும் பயிர்களும் இயல்பான நிலையில் உள்ளன. பாலக்குளத்தில் நீர் பற்றுக்குறையினால் 37.26 ஏக்கர் பரப்பளவில் சாவியாகிவிட்ட நெற்பயிர் நீங்கலாக, மேற்சொன்ன வாறு மழை நீரை நம்பியுள்ள ஏரிகளிலிருந்து பாசனம் பெற்று வளர்ந்து வரும் பயிர்களின் அறுவடை வாயிலாக 40 முதல் 60 சதவீதம் வரை விளைச்சல் கிடைக்கும். எலுவைமுக்கி, புதுக் குளம் கிராமங்களில் 50 ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துவரும் நெற்பயிர் சாவியாகும் நிலையில் உள்ளது. வளர்ந்து வரும் இந்நெற் பயிரைக் காப்பதற்காக, இக்கிராமங்களுக்கு மணிமுத்தாறு நீரை வழங்க வேண்டுமென்று கலெக்டர் பொறியியல் பாசனத் துறையை வேண்டியுள்ளார். சாத்தான்குளம் துணை வட்டம் உட்பட திருச் செந்தூர் வட்டத்தில் 833.89 ஏக்கர் பரப்பளவு, நீர்பற்றுக் குறையினால் தரிசாக விடப்பட்டுள்ளது. இவ்வட்டத்தில் பயிர்கள் முழுவதும் சாவியாகப் போகவில்லை. தரிசாக விடப்பட்ட நிலங்களுக்கும், பயிர்கள் சாவியாகப் போன பகுதிகளுக்கும் பருவகால நிலவரித் தள்ளுபடி அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு கல்வி- தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு முக்கிய மான காரியத்தை திரு. எம். கண்ணப்பன் அவர்கள் கொண்டு வருவார்கள்.